உ

கடவுள் துணை.

மதுரை N. S. பபூன் ஷண்முகம்

கிராம்போன் பிளேட்டில் பாடிவரும்

புதிய பபூன் பாட்டுகள்.

(எட்டாம் பாகம்.)

20 SEP 1

MADR

Plate Green Label Comic Records.

பிளேட் நெ. G. E. 34. } சீமை சில்குகாரி
அக்காபக்கா கைக்காரி

காமிக் பாட்டு.

சீமை சில்குக் காரி இந்த
ஜெகத்தைக்குலுக்கும் காரி பாரி (சீ)

ஜாமப்பொழுதும் போச்சு உன்
சத்தியம் பொய் யாச்சு நான்
வெளியோ ஏச்சு சின்னம்
ஏனடி கை வீச்சு (சீ)

அட்டிகைக் காசு மாலை
அழகான வைர வேலை என்
பெட்டியிலிருப்ப தாலே கண்ணே
பேசடி பதி போலே மேலே (சீ)

சபை மெச்சும் விகட நாடக திலக
பபூன் ஷண்முகம் பாட்டு கிராம்போன்

பிளேட்டில் கொடுத்த
பிரக்யாதியைக் கேட்டு
பாடி தாளம் போட்டு நல்ல
சுபசங்கதி கேட்டு மாலே
சூட்டு இதோ ரிக்கார்டுக்கு இ

G. E. 34 டை-பிளேட் பின்புறம்.

காமிக் பாட்டு.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

அக்கா பக்கா கைக்காரி மிக்க
துக்காய் நினைத்து பேசுகிறார்
எக்காலம் காட்டுகிறார்
என்னைக் கேலி மூட்டுகிறார்
எகிரிசிரிக்க வயிறு கொதிக்க
பதரி விழிக்க பயலும் சிரிக்க அ

வள்ளாள கண்டியிவள்
வாய்கொழுத்த லண்டியிவள்
வாக்குப் போக்கு சாக்கு சொல்லியே
ஏய்க்கப் பாக்குராள் நாட்டுப் பள்ளியே அ

கொட்டா முட்டா திட்டா என்று
உத்தாரம்பலக் காட்டியே அவள்
கொட்ட மடக்கிவைத்து
குர்தாரைப் போல்நிறுத்தி
கோடை ஷண்முக சாமியிருக்க
எழுந்துபோகவா எனக்குசகிக்க அ

பிளேட் நெ. G. E. 19 { தாம்தேவலோகம் / சைஞஜப்பான் }

காமிக் பாட்டு

இராகம்-சேஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

அனியாயம் அனியாயம்
ஆறும்செய்யார் பெரும் அ

K. A. மதுரை முதலியார் பிரசுரித்த தியாகராய கீர்த்தனை
1-2 பாகம் எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தாம் தேவலோகம் போனபின்பு உங்கள்
தேவியாம் தாரையம்மாள்
சந்திரனைக்கட்ட
உலகமுழுதும் தேடச்சொன்னான்
அஞ்சாம் வேதம்படிக்க மஞ்சமீதேறினாரே அ

ஐந்தாம் வேதம் கஷ்டமில்லை நீர்
அதை பார்க்க இஷ்டமில்லை
எந்தனுக்கென்ன நஷ்டமில்லை நீர்
இறந்துபோனாலும் குற்றமில்லை அ

சந்திரனுக்கு தாரைவார்த்தாய்
சரியான ஜோடி சேர்த்தாய்
என்னையும் தேய்க்கவைத்தாய்
என்னையும்
ஷண்முகத்தையும் பார்க்கவைத்தாய் அ

குருத்துரோகம் செய்தவனே
குன்மவியாதி பட்டவனே
என்னையும் தேய்க்கவைத்தாய்
என்னையும் பார்க்கவைத்தாய் அ

G. E. 19-டி-பிளேட் பின்புறம்.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி

பல்லவி.

சைனா ஜப்பான் ரங்கோன் பர்மா
சல்லா சில்க்கு காரியே சை

அநுபல்லவி

மைனா பிடிக்காதடி மாசாட்டம் பேசாதடி
மதிக்கும் ஈகோ செண்ட்டு சோப்பு
மாறிப்போச்சு கிராப்பு சிப்பு சை

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளருளிச்செய்த திருவருட்பாத் திரட்டு எட்டு பாகமும் அணா 8.

சரணங்கள்

நாகரீகம் பெருக்க பெருக்க தற்காலம் உலகத்தில்
நடைகளெல்லாம் மாறிப்போச்சு
தேகம் வெளுத்துப் போச்சு
சிங்கார பின்ன லாச்சு அடி
செந்தூராஞ் சாந்து சந்தியில்போச்சு
இந்தியர் காலம் இப்படி யாச்சு சை

அந்த நாட்டுக் கோட்டை பியூட்டியே
எதேஷ்டமாய் வளர்ந்தது
வீட்டுக்கொரு காருமூண்டு
விளையாட்டு சாஸமூண்டு
வெட்கக் கேடு வெளியிற் சொன்னால்
அக்கம் பக்கம் சிறிக்கும் பின்னால் சை

Blue Label Tamil Comic Records

மதுரை

T. A. நாகஸ்வாமி பாகவதர் பாடியது.

பிளேட் நெ. N. 3613 நாசக்காலதாசி 1 & 2 பாகம்.

குலேபகாவலி சரித்திரம்.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

நாசக்கால தாசி கலை
நம்பினோர் பர தேசி நா

அநுபல்லவி.

இந்து நேசர்களிதை யோசித் துங்கள் முன்
நேர்வரைகுறேன் பேசி பா
நாமியவர்கள் பேரையெடுத்துக்
கூறனுவிந்த ஊைர் சிரித்திடும் நா

ஸ்ரீ வடிவுடையம்மன் தாலாட்டு விலை அணா 1. எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தொகையறா.

பலபேர்கள் நடமாடும் வீதியிலே குடியிருக்கும்
பாவியாகும்
பலபேர்கள் தமைகெடுக்க கண்ணென்ற வலைவீசும்
பட்டியாகும்
பலபேர்கள் மருவிடவே மானமிலா தகங்களிக்கும்
பரத்தையாகும்
பலபேர்கள தந்தவிந்து தனிப்பிறந்த ஜென்மமிந்த
பாவைதானே

ஷை பாட்டு தொடர்.

வருடத்திற் கொரு தடவை நீர்
வாடைகண் டிடும் புடவை நல்ல
புருடர் முன் வரில் வியர்வை நாற்றம்
பொறுப்பதெவர்க்கும் அயர்வே நா

ஷை-பிளேட் இரண்டாம் பாகம்.

XIR24 N85

தொகையறா

தலைநரைத்து விட்டதென்றால் மேகம்போலே கருப்புத்
தைலம் பூசி
நிலை குலைந்து முகம் நடுக்கமுற்றாலும்
நிற்பார் வாசல்
துளை விழுந்த கன்னமதா யிருந்தாலும் மஞ்சளைத்
துலங்கத தேய்ப்பார்
கலகலென பல் வரிசைக் கழன்றாலும் வேறுதந்தங்
கட்டுவாரே.

தமிழ்நாடு ... 600 008 18606

கெ. எ. மதுரை முதலியாரவர்கள் பதிப்பித்த வடிவுடையம்மன் தாலாட்டு அவசியம் பார்க்கவும். விலை அணா 1

ஷி-பாட்டுத் தொடர்.

நகையெல்லாம் இமி டேஷன் ஜியாஸ்
லேட்டுக்கிவர்ரி லேஷன் இவர்
வகையெல்லாம் பொய் வேஷம் சிக்கும்
வாலிபராவார் மோசம் நா

விருத்தம்.

சேலேக்கோர் புருஷனேயுந் தினமணியுஞ் செண்டுமலர்
மாலேக்கோர் புருஷனேயும் வாலிபரை மயக்கும் சல்கு
ஓலேக்கோர் புருஷனேயும் உப்பு புளி அரிசி வீட்டு
வேலேக்கோர் புருஷனேயும் விளம்பவென்ருல் கணக்கில்லேயே

மதுரை கள்ளப்பார்ட்.

A. M. கார்மேக ஆச்சாரி பாடியது.

பிளேட் நெ. N. 3629 { நில்லு நில்லுங்கடி அரைப்பேட்டி ரூபாய்

காமிக் பாட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஏகம்.

நில்லுநில்லுங்கடி பெண்டுகளா வரச்
சொல்லிய ஜல்லிப் பயலேக் கண்டிங்களா
எல்லே விட்டகலா மண்டுகளா வாத்தி
தொல்லே சகியாது காட்டில் நின்றீங்களா நீங்கள்
நல்லகுல மாச்சே அது
செல்லெரித்துப் போச்சே கற்ற
கல்வியும் வீணச்சே இந்த
தொல்லுலகில் ஏச்சே
செல்லு செல்லுங்க சிரிக்கிகளா ராஜ
செல்வத்தைக் கெடுத்திட்ட சிரிக்கிகளா
செடி கானிலலேய

போலிப் புத்தகங்களே கண்டு ஏமாறாமல் K. A. மதுரை முதலியார் பதிப்பித்ததாக பார்த்து வாங்கவும்.

உங்கள் மேனி குலைய
ததி கர்வ மொழிய
வீணே கற்பு மழிய
கண்டேண்டி கார்மேகமே மாஸ்டர்
வாய்ஸ் கம்பெனி பிளேட்டில்
விண்டேண்டி கற்பதமே நி

—:o:—

N. 3629 ஷி பிளேட் பின்புறம்.

காமிக் பாட்டு.

இராகம்-சேஞ்சுருட்டி தாளம்-ஆதி.

அரைப்பெட்டி ரூபாய் தாரேன் உனை
அரைக்ஷணம் விட்டு மாறேன்
அட்டியல் பட்டாடை ஒட்டியாணம வைக்க அ
அழகு வயிரத் தோடு மன
மகிழ காதிற் போடு தங்கப்
பூமாலைகாபபு கொலுசு ரெங்கோன்
பர்மாவேலையோ தினுசு
தமாஷ் பலே பேஷு
சபாஷ் கூட பேசு அ
பஞ்சணை மீதினில் வருவாய் சற்று
கொஞ்சியொருமுத்தம் தருவாய்
பகரும் கார்மேகஞ்சொல் பாவையே கேள்
பாங்குடனே என்னையே கட்டி வாழ அ
மாஸ்டர் வாய்ஸ் கம்பெனி எனை
மங்கையரே கொஞ்சம் கவனி
மாதந்தவறாது வரிசைவரும் என்றும்
மாறாது செல்வப் பொருளே சேரும்
மறுவருஷல கூப்பிட ஆளேவரும்
மகிழ்ழ புகழே மங்கள மாகவே அ

கெ. எ. மதுரை முதலியார் பதிப்பித்த பாதுகா பட்டாபிஷேகம் டிராமா அவசியம் பார்க்கவும். விலை அணா 6.

Plate Green Label Comic Records.

மதராஸ் P. C. மஸ்தம் பாடியது.

பிளேட் நெ. G. E. 33 தளுக்குசுந்தரம் தனியாய்

தெம்மாங்கு

தளுக்கு சுந்தரம் தனியாய் போரவளே
பெண்ணே த
உன்னத ஒய்யாரி அடி
எனக்கொருமுத்தம் தாடி
நீயும்நானுங் கூடி விளையாடுவோம் வாடிகண்ணே த
கருணைசெய்ய வாடி நீயொரு
சீமைக்கமல லேடி நம்
இருவருக்கும் சிறுவயதிலே சரியான ஜோடிப்பெண்ணே த
வீணு இந்தமோடி செய்யாதடி வாடி
இந்த கவியைத்தேடி அடி
நரசி மகான் பாடினரும் த

எட்டாம் பாகம் முற்றிற்று.

பூலோக ரகசியமெனும்

மதிமோசக் களஞ்சியம்.

இதில் அடங்கிய விஷயங்கள் தெய்வபிரார்த்தனை மோசம், ஜவுளிக்கடை மோசம, அரிசி வியாபார மோசம், மூர்மார்க்கட் சன்னியாசிகள் மோசம், தேவடியாள் மோசம், தட்டுவாணி சிறிக்கிகள் மோசம், மார்வாடி மோசம், சாராயக்கடை மோசம, ஈட்டிக்காரர் மோசம், திருப்பதிக்கு போகிறவர் மோசம், உத்தியோகஸ்தர்கள் மோசம், ஜாலம செய்பவர் மோசம் இவ்வித அனேக மோசங்கள் அடங்கியதோடு வெண்பா விருத்தம் கலித்துறை பதிகங்களோடு ஆங்காங்கு ஐதீக படத்துடன் செந்தமிழ் நடையில் வசன காவியமாக எழுதி முடித்திருக்கிறது. 2-பாகம் சொற்ப காபிகளே இருக்கிறது.

விலை ரூபா 2 0 0

ஷண்முகானந்த புத்தகசாலை,
பார்க் டவுன், மதராஸ்.

மனோரஞ்சனி பிரஸ், மெளகர்பேட்டை, சென்னை.